RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

Asian Research Association

DOI: 10.54392/ijmrd2523

# Feminist thought in Akila's Religious Works

K. Vignesh [a,*], A. Senthamarai [a]

[a] Department of Tamil, Erode Arts and Science college, Erode-638009, Tamil Nadu, India.

*Corresponding author Email: vickyvimalpgp@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2523

Received: 09-02-2025; Revised: 21-04-2024; Accepted: 03-05-2025; Published: 20-05-2025

**Abstract:** Poet Akila has created countless works including novels, poetry, and essays, yet the novel 'Aaravi' plays a significant role. It explores the living conditions of women in the twentieth and twenty-first centuries. This novel represents contemporary literature. All forms of writing, including essays, poetry, short stories, novels, and serials, reflect the living conditions of modern people. In this way, the author of 'Aaravi', Akila, elaborates on the status of women from the beginning of the twentieth century to the twenty-first century.

**Keywords:** Poet Akila, Aaravi, Contemporary literature, Novel

**Language:** Tamil

## அகிலாவின் அறவி படைப்புகளில் பெண்ணிய சிந்தனை

கி. விக்னேஷ் [அ, *], ஆ.செந்தாமரை [அ]

[அ] தமிழ்த்துறை, ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு-638009, தமிழ்நாடு, இந்தியா

### முன்னுரை

வையகம் எங்கும் பரந்து கிடக்கும் தமிழ் மக்களை தன்னுடைய இலக்கியத்திறனாள் கவர்ந்திழுக்கும் ஆற்றல் கொண்டது. நவின கால இலக்கியம். கட்டுரை, கவிதை, சிறுகதை, நாவல், புதினம் என இவைகள் அனைத்தும் நவின கால மக்களின் வாழ்வியல் நிலைகளை வெளிப்படுத்துகிறது. அந்த வழியில் தான் அறவி என்றும் நாவலின் நூலாசிரியர் அகிலா அவர்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருப்பத்தொன்றாம் நூற்றாண்டு வரை உள்ள பெண்களின் நிலைப்பாட்டை எடுத்து உரைக்கிறார். இதனை ஆராய்வதே இக்கட்டுரை ஆகும்.

### அறவி நாவலின் மையக்கரு

அறவி என்றால் ‘துறவு’ துறவுத்தன்மையைத் எதார்த்த வாழ்வியலுக்குள் பொருத்திப்பார்த்தால் துறவின் அர்த்தம் புதிதாய் அமையும். உண்மை முகங்களுக்குள் துறவுத் தன்மையைப் பொருத்திப் பார்க்கும் நோக்கில் அமைகிறது. நாவல். உள்ளத்து உணர்வுகளை வெளிப்படையாக தோன்றும் படியும், படித்தவுடனும், பார்த்தவுடனும் மனதில் உடனே பொருள் புலப்படும்படி அறவி நாவல் அமையும்.

“உள்ளத்து நிகழ்ச்சியின் உடற்குறி” என கூறும் நர்மதாவின் தமிழ் அகராதி. [நாமதா அகராதி ப.340]

உணர்வுகளின் வெளிப்பாடு நிலைகளில் ஒன்று பேச்சு. கடந்த நூற்றாண்டில் பெண்கள் மீது திணிக்கப்பட்ட பாலியில் வறட்சி பல பெண்களை இல்லறத்துள்ளும் “துறவறம்” பேணும் நிலையை நோக்கி தள்ளி இருப்பதை மறுக்க இயலாது. அதை பெண்ணின் தனிப்பட்ட விருப்பமாக மாற்றும் யதார்த்தங்களும் அரங்கேறின.

இன்றைய பெண்ணின் திண்ணம், சடங்குகளை தாண்டி வாழ்வியலை அதன் நுட்பத்துடன் அணுகவும் சென்ற நூற்றாண்டின் தொடக்கக் காலத்துப் பெண்ணையும் அதன் பிற்காலத்துப் பெண்களையும் பற்றி இந்த புதினம் பேசுகிறது. அந்த காலகட்டத்துப் பெண்களின் இணைத் தன்மையையும், முரண்களையும் இப்புதினம் கையாள்கிறது.

வெவ்வேறு நாடுகள், நகரங்களின், கலாச்சாரம், கடிதங்கள் என்றவாறு செல்லும் இந்தக்கதை பெண்கள் எவ்வாறு அவற்றின் பொருட்டு உருமாற்றம் பெறுகிறார்கள், என்பதையும் உணர்த்த முயல்கிறது.

## அறவி குறித்து கூறும் காப்பியங்கள்

- அறம் [மணிமேகலை]
- "புண்ணியத்தோடு கூடியது உலக அறவியும் முதியாள் குடிகையும்" [மணிமேகலை.24]
- சன்னியாசினி ஆசு இல் கொள்கை அறவி பால் அணைந்து, ஆங்கு [சிலப்பதிகாரம் 13]
- 'பொதுவிடம், பெண்துறவு' [மணிமேகலை]

பெண்களுக்கு உள்ள பற்றுதல் என்ன? அவர்களுடைய வாழ்வு எதனோடு பிணைந்து இருக்கிறது. அவருடைய தேடல் என்ன? என்பதை நாம் அறிவதே அறவி ஆகும்.

## அறவி நாவலின் அமைப்பும் கதைப்போக்கும்

'பெண்களின் வாழ்வு' குறித்து அமைகிறது. அதிகமான கதாபாத்திரமும், கதை மாந்தர்களையும் கொண்டது. பெண்களுடைய உடல், உணர்வு, குடும்ப வாழ்வு, ஆண் தோழமை என பல உணர்ச்சிகளின் வெளிப்பாடாக "அறவி" நாவல் அமைந்துள்ளது.

பெண்களுடைய 'அகவாழ்வு' குறித்தும் வெளிப்படுத்துகிறது. இதனை பாரதியார்,

"விட்டு விடுதலை யாகி நிற்பாயிந்தச்

சிட்டுக் குருவியை போல" [அறவி ப.எண் 104]

பெண்களுக்கு உண்டான சுதந்திரம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை உணர்த்துகிறார். இந்த நாவல் மூன்று தலைமுறைப் பெண்களையும் அவர்களுடைய உறவு முறை கல்வி, குடும்ப வாழ்வு பற்றியும் மிகத் தெளிவாய் சித்தரிக்கிறது.

செல்லம்மா என்னும் ஆச்சி, அவர்கள் உடைய பேத்தியாக தேவகியும், தேவகியின் தோழியாக வசுவும், தேவகியின் மகளாக யமுனாவும் கதைப்பாத்திரங்காள அமைகிறது. தேவகி, வசுவின் குடும்பங்கள் மற்றும் தேவகி மகள் யமுனாவின் திருமண உறவு முறிவு, மற்றும் திருமண உறவு குறித்த புரிதல், வசுவின் இளைய மகனாக சரவணன் வருகை மற்றும் இவர்கள் இடையே நடைபெறும் 'கடிதப்' பரிமாற்றம் இவைகளின் புரிதலே இந்நாவல்.

"அகிலா" அவர்கள் இந்நாவலில் நம்மை திருச்செந்தூர் முதல் இங்கிலாந்து வரை அழைத்து செல்கிறார். பெண்களுக்கு சமையல் அறைகளை தாண்டி வெளியே புதியதோர் உலகம் காத்துக் கொண்டிருக்கிறது. சுதந்திரம் என்றும் வானில் சிறகு விரித்து பறக்க தொடங்கலாம் என்று பாரதியின் வரிகளில் காணலாம்.

"அறவி முந்தது பண்டை வழக்கம்;

ஆணுக் குப்பெண் விலங்கெனும்

அஃதே

விடியும் நல்லொளி காணுதி நின்றே,

மேவு நாக ரிகம்புதி தொன்றே;

கொடியர் நம்மை அடிமைகள் என்றே

கொண்டு, தாம் முதல் என்றன ரன்றே?

அடியோ டநத் வழக்கத்தைக் கொன்றே"

பெண் என்பவன் ஆணுக்கு நிகரானவள் அனைத்து நன்மை, தீமைகளிலும் தன்னை முழுமையாக அடையாளப் படுத்திக் கொள்ள வேண்டும், சுதந்திரம் என்பது அனைவருக்கும் உரியது என்கிறார்.

21 ஆம் நூற்றாண்டில் பெண்கள் அனைவரும் தனக்கு என்ன தேவை என்பதை தெளிவாய் தெரிவு செய்கிறார்கள். திருமணம் குறித்து அவர்களிடையே புரிதல் இருக்கிறது. புரிதல் உணர்வுகளை கல்வி அவர்களுக்கு வழங்கி உள்ளது. அப்படிப்பட்ட பெண் தான் யமுனா. அவளுடைய தாயின் திருமண உறவு குறித்து கவலையுற்ற நிலையில் "யமுனா நான் வாழ்ந்த இந்த அறவி வாழ்வை நீயும் வாழ்ந்து விடாதே, அது ஓர் கொடிய நரகம் பெண்களுக்கு" என்றால் அப்போது யமுனா "அம்மா இப்பொழுது பெண்ணில் உலகம் மாற்றம் பெற்று விட்டது ஒவ்வொரு பெண்ணும் தன்னுடைய விருப்பு, வெறுப்புகளை தாண்டி தனிமனிதர்களாக வாழக் கற்றுக் கொண்டார்கள்" என்றாள் யமுனா.

யமுனாவைப் போலும், வசுவைப் போலும் தேவகியால் யோசனை செய்ய முடியுமா என்றால் முடியாது. அவர்களுக்கு இப்படி யோசிக்க வேண்டும் என்று தெரியாமல் குடும்ப வாழ்விலே இருந்து விட்டனர்.

இவ்வாறு இவற்றுள் இருந்து மீண்டு தனி உலகிற்குள் அடையாளப் படுத்திக் கொள்ள "கல்வி" மிகவும் உதவியது.

"கற்றோற்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என்றும்

கற்பவரால், கற்றலால் தான் தன்னைப் பற்றி சிறப்பை உணர்த்த முடியும்.

வீட்டில் உள்ள அனைவரது தேவைகளையும் தன்னை தவிர வேறு யாராலும் பூர்த்தி செய்ய இயலாது என்று எண்ணுபவள் வசு. வசு சரவணனுடன் சென்ற பிறகு வீட்டு வேலைக்கு நான்கு ஆட்களை வைத்து கொள்கிறாள் வசு மருமகள்.வசுவும், தேவாவும், சரவணனுக்கும், யமுனாவிற்கும் திருமணம் செய்து வைக்க விரும்புகிறார்கள். வசு பெங்களூர் வந்த பிறகு புதியதோர் உலகை கண்டாள். இது அவளுள் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஒவ்வொரு பெண்ணும் தனக்கு என்ன வேண்டும் என்பதை தானாகவே முடிவு எடுத்து கொள்ள வேண்டும். அப்போது தான் அங்கு சுதந்திரம் என்னும் மலர் மலரும்.சமயலறை, குடும்பங்கள் தாண்டி வெளியே ஓர் உலகம் உள்ளது என்பது உணர வேண்டும். அவற்றை தன்னுடைய தலைமுறை, கலாச்சாரத்திற்கு ஏற்வாறு அமைத்து கொள்ள வேண்டும். பெண் என்பவள் தன்னுடைய வாழ்வை எதனோடு பிணைத்து வைக்கிறாள்? தன்னை எவ்வாறு கட்டமைத்துக் கொள்கிறாள்? தேடல் என்ன? எதனை பெறுகிறாள்? என்பதை நமக்கு இந்த அறவி நாவல் விளக்கி உள்ளது.

## முடிவுரை

இக்கட்டுரை வாயிலாக பெண்களின் தொடக்க கால வாழ்வு நிலையும், அதில் ஏற்படும் மாற்றங்கள் குறித்தும் தெளிவாய் நாம் இக்கட்டுரையில் கண்டோம். பெண்கள் தனிப்பிறவிகள் தான். அதீதமான பற்றுதலும் பிடிமானமும் சாத்தியப்படும் அவர்களுள், துறவறமும் எளியதாய் வாய்க்கப் பெறுவதுதான் அவர்களின் பெருஞ்சிறப்பும், வருத்தமும். இதுவே "அறவி" யின் மூலம் நூலாசிரியர் கூறுகிறார்.

## References

Aravi, (2023) Kalachuvadu Publishing House, Publishing House, Nagercoil, India.

Namanathan, (1995) Namanathan Tamil Dictionary Namatha Publishing House, Chennai, India

## Conflict of interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2025. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.

## Cite this Article

K. Vignesh, A. Senthamarai, Feminist thought in Akila's Religious Works, Indian Journal of Multilingual Research and Development, Vol 6, Iss 2, (2025) 13-16. DOI: https://doi.org/10.54392/ijmrd2523